# ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகள்

யோகர் சுவாமிகள், அம்பலவாணர் அவர்களுக்கும் சின்னாச்சிப்பிள்ளை அவர்களுக்கும் மாவிட்டபுரம் என்னும் இடத்தில் அவதரித்தார். அவருடைய பத்தாவது வயதில் தாயார் சிவபதம் அடைந்தார். அதன் பின் மாமியாருடன் கொழும்புத்துறையில் வாழ்ந்து வந்தார்.

அவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மூன்று மொழிகளையும் நன்கு கற்று அம்மொழிகளிலுள்ள ஞானநூல்களையும் கற்று அறிந்தார். விவிலிய வேதம், குர்ஆன் முதலிய பிறசமய நூல்களையும் கற்று அறிந்தார். இவர் தனது கல்லூரிப் படிப்பை முடித்த பின்னர் கிளிநொச்சியில் உத்தியோகம் புரிந்தார். இவருக்குப் பணத்தில் சிறிதளவும் ஆசை எப்போதும் இருக்கவில்லை.

இவருடைய காலத்தில் செல்லப்பா தேசிகர் என்னும் ஒருவர் நல்லூர்க் கந்தனின் தேர்க்கொட்டிலடியில் படுத்து உறங்கி வாழ்ந்து வந்தார். அவ்வழியால் போய் வருவோரைக் கண்டால் சின்னத்தனமான சொற்களால் ஏசுவார். எல்லோரும் இவரை ஒரு விசரர் என எண்ணினர். அவருடைய உடை, தோற்றம், செயல் எல்லாம் பைத்தியக்காரன் போலவே தோற்றின. இவருடன் நெருங்கிப் பழகிய ஒருசிலர் அவர் பிதற்றும் வார்த்தைகளை அவதானித்தனர். அவற்றில் சில ஞானவார்த்தைகள் என்பதைக் கண்டனர். இவர் விசரன் அல்ல, ஒரு ஞானி என்பதை அவர்கள் அறிந்தனர். அவர்களுடன் சேர்ந்து யோகரும் தேசிகரைப் பார்க்கச் சென்றார். யோகரைக் கண்டதும் செல்லப்பா தேசிகர் "யாரடா நீ?" என்று அதட்டினார். அவர் கூறிய அந்த ஞானமொழியை, ஞான மந்திரத்தை யோகர் சுவாமிகள் ஆழ்ந்து சிந்தித்தார். அன்று தொடக்கம் யோகர் சுவாமிகள் செல்லப்பா தேசிகரின் சீடரானார். யோகர் சுவாமிகள் அதன்பின் தன் உற்றார், உறவினர், உத்தியோகம் எல்லாவற்றையும் துறந்து துறவியானார். குருவுடன் சேர்ந்து தேர்க்கொட்டிலடியில் வசிப்பதை விட்டு, குருவைப் பிரிந்து சென்று கொழும்புத்துறையில் நடுச்சந்தி ஒன்றிலுள்ள இலுப்பை மரத்தடியிலும், பின்பு ஒரு ஆச்சிரமம் அமைத்தும் வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் யோகர் சுவாமிகளைச் சூழ்ந்த தொண்டர் கூட்டம் சேர்ந்தவண்ணம் இருந்தார்கள். அவர்களுக்கு ஆசிகூறி நற்போதனை கூறி வந்தார். அத்துடன் நின்றுவிடாமல் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று நற்போதனைகள் புரிந்தார். மக்களும் அவரைப் போற்றி மதித்தனர். அவர் கூறிய நற்போதனைகளின்படி நடந்தும் வந்தனர். இவ்வாறு மக்கள் மனதில் நல்லிடத்தை யோகர் சுவாமிகள் பெற்று நிலைபெற்றார்.

உலகம் பயனுற வாழ்ந்த உத்தமர்கள் பலர் யோகரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றார்கள். வீரஞானி விவேகானந்தரைப் பற்றிக் குறிப்பிடும்போது அவரின் கம்பீரமான தோற்றமும் சபையில் இருந்த நேரிய தண்டம் கருத்தாழம் மிக்க ஆங்கிலப் பேச்சும் பற்றிச் சொல்லுவார். அப்போது விவேகானந்தர் நேர் எதிரில் நிற்பது போலிருக்கும். யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தபோது மகாத்மா காந்திக்கும் யோகரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மகாத்மாகாந்தி

தன்னெதிரில் அமர்ந்திருந்தபோது "ஒரு அன்புக் கடலில் இருப்பது போன்றிருந்தது" என்று பிற்காலத்தில் இந்தச் சந்திப்பைப் பற்றிக் குறிப்பிடும் போது யோகர் கூறினாராம். யோகர் சுவாமி அவர்கள் கொழும்புத் துறையில் ஒரு சிறிய குடிசையில் எளிமையாக வாழ்ந்தார். பல அன்பர்கள் அவரிடம் தினமும் வருவதால் அந்தக் குடிசை அவரது ஆச்சிரமம் என்று அழைக்கப் பெற்றது. இந்த நூற்றாண்டின் முற்பகுதி முழுவதும் யோகர் சுவாமியின் காலம் எனலாம். இக்காலத்தில் தான் இலங்கை சுதந்திரமடைந்தது. பாடசாலைகள், கோயில்கள் யாவும் செல்வச் செழிப்புடன் வளர்ந்தன. விவசாயமும் வியாபாரமும் தொழில் களும் பெருகி வாழ்க்கையை வளமாக்கின. இவை எம் சிந்தனைகளை நஞ்சூட்டி விடாதிருப்பதற்கு நற்சிந்தனையையும் செய்யும் தொழில் அனைத்தும் தொண்டா கச் செய்யும் பயிற்சியையும் பெறுவதற்கு சிவதொண்டன் நிலையத்தையும் 'சிவதொண்டன்' என்ற மாதந்த சஞ்சிகை ஒன்றையும் உருப்பெறச் செய்தார் யோகர் சுவாமிகள். எத்தொழிலைச் செய்தாலும் என்ன நிலையில் எங்கு இருந்தாலும் எவரது உதவியுமின்றி எமக்குள்ளேயே செய்யக்கூடிய இலகுவான சாதனை ஒன்று யோகர் தந்திருக்கின்றார். "எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய்". இச்சாதனையைச் செய்தால் எமது வாழ்வில் எப்பிரச்சினையும் வாராது. எல்லாவற்றிற்கும் அத்துவிதப் பொருளாம் கடவுளே காப்பாக இருப்பார். 'ஒரு பொல்லாப்பும் இல்லை'.

நன்றி !

வணக்கம் !